வாய்மையே வெல்லும்

<u>சுருக்கம்</u>

பள்ளிக்கல்வி – அரசுத் தேர்வுகள் இயக்ககம் – அரசுத் தேர்வுகள் இயக்ககம் மற்றும் 7 அரசுத் தேர்வுகள் மண்டல அலுவலகங்களிலுள்ள பணியிடங்களை புணரமைப்பு (Re-structuring) செய்து – தமிழகத்தின் 32 வருவாய் மாவட்ட வாரியாக, மாவட்ட தேர்வுகள் துறை அலுவலகம் துவங்க – அனுமதி அளித்து – ஆணை வெளியிடப்படுகிறது.

---

<u>பள்ளிக்கல்வித்(அ.தே) துறை</u>

அரசாணை (நிலை) எண். 193 நாள்.07.09.2018.

திருவள்ளுவர் ஆண்டு, 2049
விளம்பி வருடம், ஆவணி–22,

படிக்கப்பட்டவை :-

அரசுத் தேர்வுகள் இயக்குநரின் கடித ந.க.எண்.106938/இ1–1/2017, நாள். 08.05.2018 மற்றும் 11.06.2018.

-------

<u>ஆணை:–</u>

அரசுத் தேர்வுகள் இயக்ககம் ஒரு தனி இயக்குநரகமாக பிப்ரவரி 1975-இல் உருவாக்கப்பட்டது. இவ்வியக்ககத்தில் எட்டாம் வகுப்பு, இடைநிலை (பத்தாம் வகுப்பு), மேல்நிலை முதலாமாண்டு மற்றும் இரண்டாமாண்டு தேர்வுகள் முதன்மைத் தேர்வுகளாகவும், ஓவியம், அச்சிடுதல், விவசாயம், கைத்தறி நெசவு, பார்வையற்றோருக்கான பட்டயப்படிப்பு, கல்வியியல் படிப்பு, ஆடை அலங்காரம் மற்றும் பிற பாடங்கள் சார்ந்து மொத்தம் 22 வகையான தொழில் நுட்பத் தேர்வுகளையும் உள்ளடக்கி சுமார் 40 வகையான அரசு பொதுத் தேர்வுகள் நடத்தப்பட்டு, (உடனடித்தேர்வு, துணைத்தேர்வு உட்பட) சுமார் 25 இலட்சம் மாணாக்கர்கள் தேர்வினை எழுதி வருகின்றனர். மேலும், இத்தேர்வுகளுக்கான முடிவுகள், மதிப்பெண் சான்றிதழ்கள், மறுகூட்டல் விடைத்தாள் நகல் வழங்குதல், மறுமதிப்பீடு செய்யும் பணிகள் ஆகியவை இவ்வியக்ககத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

2. அரசுத் தேர்வுகள் இயக்ககத்தில், மொத்தமாக ஒப்பளிக்கப்பட்ட பணியிடங்கள் 703 ஆகும். இவற்றில் நிரந்தர பணியிடம் 340 மற்றும் தற்காலிக பணியிடம் 363 ஆகும். இவற்றுள் 418 பணியிடங்கள் தலைமை அலுவலகத்திலும், 285 பணியிடங்கள் 7 மண்டல அலுவலகங்களிலும் ஒதுக்கீடு செய்யப்பட்டு, தற்போது பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்ற நிலையில், மாவட்ட அளவில் அரசுத் தேர்வுகள் தொடர்பாக பெறப்படும் மாணாக்கர்களின் கோரிக்கை பணிகளை அந்தந்த மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் அலுவலகங்களில் உள்ள பணியாளர்களைக் கொண்டே மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தற்போது, அரசாணை (நிலை) எண்.100, பள்ளிக்கல்வித்(அ.தே.1) துறை, நாள். 22.05.2017–இன்படி, மார்ச் 2018, முதல் மேல்நிலை முதலாம் ஆண்டு பயிலும் மாணாக்கர்களுக்கும் பொதுத் தேர்வு நடத்திட அரசாணை வெளியிடப்பட்டது. இதனால், அரசுத் தேர்வுகள் துறை மற்றும் மாவட்ட அளவிலான முதன்மைக் கல்வி அலுவலர் அலுவலகங்களில் உள்ள பணியாளர்களுக்கு வழக்கமான

பணியுடன், கூடுதலாக தேர்வுப்பணிகள் அதிகரித்துள்ளது. மேலும், தற்போது அரசு பொதுத் தேர்வெழுதும் மாணாக்கர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாலும், அதற்கான தேர்வுப் பணிகள் மிகவும் அதிகரித்துள்ளது.

3. எனவே, அதனை குறைக்கும் நோக்குடனும், மேலும் தேர்வுப் பணிகளை தேர்வுத் துறை பணியாளர்களைக் கொண்டே மேற்கொள்ள ஏதுவாக, அரசுத் தேர்வுகள் இயக்ககத்தினைப் புணரமைப்பு (Re-structuring) செய்ய வேண்டி கீழ்க்கண்ட செயற்குறிப்பினை அரசுத் தேர்வுகள் இயக்குநர் மேலே படிக்கப்பட்ட கடிதத்தில் அளித்துள்ளார்:–

(அ) தற்போது இயங்கிவரும் தலைமையலுவலகம் மற்றும் 7 மண்டல அலுவலகங்களில் உள்ள பணியிடங்களைப் புணரமைப்பு (Re-structure) செய்து, 32 வருவாய் மாவட்ட வாரியாக அலுவலகங்கள் துவக்கி, மேற்கண்ட பொதுத் தேர்வுகள் தொடர்பாக அனைத்துப் பணிகளையும் மேற்கொள்ளலாம் என்றும்;

ஆ) அந்தந்த வருவாய் மாவட்டங்களில் தேர்வுகள் துறை அலுவலகம் அமைப்பதற்கான கட்டிடங்கள் பயன்பாட்டிற்கு உள்ளதாக முதன்மைக் கல்வி அலுவலர் தெரிவித்துள்ள நிலையில், மேற்கண்ட வருவாய் மாவட்ட அலுவலகத்திற்கு தேவைப்படும் அறைகலன்களை, தற்போது இயங்கி வரும் மண்டல அலுவலகங்களிலிருந்து மாற்றம் செய்யவும், ஒருங்கிணைந்த கணினி வசதிக்கு, ஏற்கனவே வெளியிடப்பட்ட அரசாணை (நிலை) எண்.273, பள்ளிக் கல்வித்(ஜிஇ.1) துறை, நாள்.28.12.2017–இல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள தொகையான ரூ.2,71,89,913/–ஐ பயன்படுத்திக் கொள்ளலாம் என்றும்;

இ) இவ்வாறு மாவட்டந்தோறும் அரசுத் தேர்வுகள் துறை அலுவலகங்கள் அமைக்கப்படும்போது, அரசுத் தேர்வுகள் துறையில், தற்போதுள்ள 19 செயலாளர் நிலைப் பதவிகள் மற்றும் கூடுதலாக 15 செயலாளர் பதவிகளும் (19 + 15 = 34) உதவி இயக்குநர் பதவியாக பெயர் மாற்றம் செய்யலாமென்றும், இவ்வாறு பெயர் மாற்றம் செய்யப்படுவதால், ஊதியக் கட்டில் மாற்றம் ஏதுமில்லை (செயலாளர் நிலைப் பதவிகளுக்கான தற்போதைய ஊதியக்கட்டு 56100–177500 (நிலை 22) என்றும் தெரிவித்து இது குறித்து உரிய ஆணை வேண்டியுள்ளார்.

4. மேற்கண்ட அரசுத் தேர்வுகள் இயக்குநரின் கருத்துருவினை அரசு நன்கு பரிசீலித்து, அதனை ஏற்று, அரசுத் தேர்வுகள் இயக்ககத்தில் தற்போது இயங்கிவரும் தலைமையலுவலகம் மற்றும் 7 மண்டல அலுவலகங்களில் உள்ள பணியிடங்களை புணரமைப்பு (Re-structure) செய்து, தமிழகத்தில் உள்ள 32 வருவாய் மாவட்ட வாரியாக, அரசுத் தேர்வுகள் அலுவலகம் துவக்குவதற்கு கீழ்க்கண்ட நிபந்தனைக்குட்பட்டு, ஒவ்வொரு அலுவலகமும் (இவ்வரசாணையின் இணைப்பில் உள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு) 10 நபர்களைக் கொண்ட அலுவலகமாக, வரிசை எண்.1–ல் குறிப்பிட்டுள்ளவாறு உதவி இயக்குநரை (ரூ.56100–177500 (நிலை 22) என்ற ஊதியக்கட்டில்) தலைமையாகக் கொண்டு செயல்படவும், மேலும் கூடுதலாக தேவைப்படும் அலுவலர்கள்/பணியாளர்களை கலம் எண்.6–இல் குறிப்பிட்டுள்ளவாறு தேர்ந்தெடுத்து நிரப்பிக்கொள்ளவும் அரசுத் தேர்வுகள் இயக்குநருக்கு அனுமதி அளித்து அரசு ஆணையிடுகிறது:–

- இந்நேர்வில் மிகைப்பணியிடங்களாகக் கருதப்படும் உதவியாளர், பதிவுரு எழுத்தர், தொழிலாளர் மற்றும் ஓட்டுநர் ஆகிய பணியிடங்களை அரசுக்கு உடனே ஒப்புவிப்பு செய்யப்படவேண்டும்.

3...

- தற்போது செயல்பாட்டில் உள்ள செயலாளர் நிலைப் பதவிகள் மற்றும் கூடுதலாக கோரப்பட்டுள்ள செயலாளர் பதவிகள் அனைத்தும், உதவி இயக்குநர் பதவியாக மட்டுமே பெயர் மாற்றம் செய்து செயல்படுத்தப்படவுள்ளதால், இது குறித்து நிர்வாக ஆணை வெளியிடப்பட்டவுடன் சார்ந்த விதிகளில் பெயர் மாற்றம் செய்வது குறித்தும் உரிய கருத்துருவினை அரசுக்கு உடனடியாக அனுப்பி வைக்கவேண்டும்.

5. இவ்வரசாணை நிதித்துறையின் அ.சா.கு.எண்.46202/Edn-II/2018, நாள். 07.09.2018–இல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பிரதீப் யாதவ்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
இயக்குநர், அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை–6.
இயக்குநர், பள்ளிக்கல்வி இயக்ககம், சென்னை–6.
இயக்குநர், தொடக்கக் கல்வி இயக்ககம், சென்னை–6.
இயக்குநர், மெட்ரிக்குலேசன் பள்ளிகள் இயக்ககம், சென்னை–6.
இயக்குநர், மாநில கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், சென்னை–6.
உறுப்பினர், ஆசிரியர் தேர்வு வாரியம், சென்னை–6.
மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம், சென்னை–6.
இயக்குநர், பொது நூலகத் துறை, சென்னை–2.
இயக்குநர், பள்ளிசாரா மற்றும் வயது வந்தோர் கல்வி இயக்ககம், சென்னை–6.
மாநிலத் திட்ட இயக்குநர், ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி திட்டம், சென்னை–6.

<u>நகல்:–</u>
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின்
முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9.
மாண்புமிகு பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அவர்களின்
முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9.
பள்ளிக்கல்வித் துறை முதன்மைச் செயலாளர் அவர்களின்
முதுநிலை முதன்மை தனிச் செயலாளர், சென்னை–9.
பள்ளிக்கல்வித் துறையின் அனைத்து பிரிவுகள், சென்னை–9.
நிதி (கல்வி II)த் துறை, தலைமைச் செயலகம், சென்னை – 9.
இருப்பு கோப்பு / உதிரி கோப்பு.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.

வெளியிடப்பட்ட அரசாணை (நிலை) எண்.193, பள்ளிக்கல்வித் (அ.தே) துறை, நாள்.07.09.2018.

இணைப்பு

| வ. எண். | பதவியின் பெயர் | ஒப்பளிப்பு செய்யப்பட்ட மொத்தப் பணியிடங்கள் | தற்போதுள்ள பணியிடங்கள் | | தேவைப்படும் பணியிடங்கள் (32 வருவாய் மாவட்டங்கள்) | தேர்ந்தெடுக்கும் முறை |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | | (5) | (6) |
| 1. | உதவி இயக்குநர் | 19 | தலைமையகம் | 12 | 15<br>(32-17 = 15) | தேர்ந்தோர் பட்டியலில், தகுதியுள்ள கண்காணிப்பாளர் பதவியிலிருந்து பதவி உயர்வின் மூலம் நிரப்பிக் கொள்ளலாம். |
| | | | மண்டல அலுவலகம் | 7 | | |
| | | | மொத்தம் = | 19 | | |
| | | | (2 பணியிடங்கள் தலைமையகத்தின் அவசிய தேவைக்கு) | | | |
| 2. | கண்காணிப்பாளர் | 67 | தலைமையகம் | 47 | தேவை எழவில்லை. | ஏற்கனவே பணிபுரிந்து வரும் பணியாளர்களைக் கொண்டு நிரப்பிக் கொள்ளலாம். |
| | | | மண்டல அலுவலகம் | 20 | | |
| | | | மொத்தம் = | 67 | | |
| 3. | உதவியாளர் | 180 | தலைமையகம் | 128 | தேவை எழவில்லை. | ஏற்கனவே பணிபுரிந்து வரும் பணியாளர்களைக் கொண்டு நிரப்பிக் கொள்ளலாம். (இப்பதவியில், மிகைப் பணியிடங்களாக கருதப்படும் 40 பணியிடங்கள் அரசுக்கு ஒப்புவிப்பு செய்யப்பட வேண்டும்) |
| | | | மண்டல அலுவலகம் | 52 | | |
| | | | மொத்தம் = | 180 | | |
| 4. | இளநிலை உதவியாளர் | 102 | தலைமையகம் | 46 | தேவை எழவில்லை. | ஏற்கனவே பணிபுரிந்து வரும் பணியாளர்களைக் கொண்டு நிரப்பிக் கொள்ளலாம். |
| | | | மண்டல அலுவலகம் | 56 | | |
| | | | மொத்தம் = | 102 | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 5. | தட்டச்சர் | 19 | தலைமையகம் 11<br>மண்டல அலுவலகம் 8<br>மொத்தம் = 19 | | 18 (32–19 = 13 13 + 5 = 18) | தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்–தின் நேரடி நியமனம் மூலம் நிரப்பிக் கொள்ளலாம். |
| 6. | பதிவுரு எழுத்தர் | 94 | தலைமையகம் 35<br>மண்டல அலுவலகம் 59<br>மொத்தம் = 94 | | தேவை எழவில்லை. | ஏற்கனவே பணிபுரிந்து வரும் பணியாளர்களைக் கொண்டு நிரப்பிக் கொள்ளலாம். (இப்பதவியில், மிகைப் பணியிடங்களாக கருதப்படும் 16 பணியிடங்கள் அரசுக்கு ஒப்புவிப்பு செய்யப்பட வேண்டும்.) |
| 7. | அலுவலக உதவியாளர் | 43 | தலைமையகம் 28<br>மண்டல அலுவலகம் 15<br>மொத்தம் = 43 | | தேவை எழவில்லை. | ஏற்கனவே பணிபுரிந்து வரும் பணியாளர்களைக் கொண்டு நிரப்பிக் கொள்ளலாம். |
| 8. | தொழிலாளி | 85 | தலைமையகம் 62<br>மண்டல அலுவலகம் 23<br>மொத்தம் = 85 | | தேவை எழவில்லை. | ஏற்கனவே பணிபுரிந்து வரும் பணியாளர்களைக் கொண்டு நிரப்பிக் கொள்ளலாம். (இப்பதவியில், மிகைப் பணியிடங்களாக கருதப்படும் 40 பணியிடங்கள் அரசுக்கு ஒப்புவிப்பு செய்யப்பட வேண்டும்) |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 9. | ஓட்டுநர் | 11 | தலைமையகம் | 5 | தேவை எழவில்லை | ஏற்கனவே பணிபுரிந்து வரும் பணியாளர்களைக் கொண்டு நிரப்பிக் கொள்ளலாம். (இப்பதவியில், மிகைப் பணியிடங்களாக கருதப்படும் 6 பணியிடங்கள் அரசுக்கு ஒப்புவிப்பு செய்யப்பட வேண்டும்.) |
| | | | மண்டல அலுவலகம் | 6 | | |
| | | | மொத்தம் = | 11 | | |
| 10 | துப்புரவுபணியாளர் | 9 | தலைமையகம் | 4 | 28 (32 – 9 = 23 23 + 5 = 28) | வெளிமுகமை (out sourcing ) வாயிலாக நிரப்பிக் கொள்ளலாம். |
| | | | மண்டல அலுவலகம் | 5 | | |
| | | | மொத்தம் = | 9 | | |

பிரதீப் யாதவ்
அரசு முதன்மைச் செயலாளர்

//உண்மை நகல்//

பிரிவு அலுவலர்.